# தமிழ்நாட்டில் வாக்குத் திருட்டை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்!

**முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி**

**இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு யார் யாரோ கிளம்பி, இந்தக் கழகத்தை அழித்து விடலாம்; ஒழித்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்களே, அவர்கள் கனவெல்லாம் நிச்சயம் பலிக்காது, எந்தக் கொம்பனாலும் இந்த இயக்கத்தைத் தொட்டுக் கூட பார்க்க முடியாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.**

ஏழுமலை அவர்களுடைய அருமை மகன் நம்முடைய சகோதரர் பாபு அவர்கள் இங்கே நன்றி உரை ஆற்றுகிறபோது எடுத்துச் சொன்னார். "நாங்கள் பெருமைப் படுகிறோம்; மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்; இதை எங்கள் வாழ்நாளில் மறக்க மாட்டோம்" என்றெல்லாம் சொன்னார்கள். ஏழுமலை அவர்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்தில் நாங்கள் கலந்து கொள்வதில், உள்ளபடியே நாங்கள் பெருமைப்படுகிறோம்; மகிழ்ச்சி அடைகிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

**துணிவோடு களம் காணும் ஆற்றல்மிக்க செயல்வீரர் செங்குன்றம் பாபு!**

இன்றைக்கு பாபு அவர்கள், தந்தையின் வழியில் கொள்கைத் தடம் மாறாமல் இந்த இயக்கத்திற்குத் துணை நின்று தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். மாணவப் பருவத்தில் இருந்தே கழகப் பணிகளுக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு முழுமையாக உழைத்துக் கொண்டு இருக்கிறார். போராட்டக் களம் என்றாலும், துணிவோடு களம் காணும் ஒரு ஆற்றல் மிக்க செயல்வீரராக நம்முடைய பாபு அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவர் மென் மேலும் வளர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**SIRக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு - கழகம் சார்பில் போராட்டம்!**

இன்றைக்கு நாடு இருக்கும் சூழ்நிலை எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலும் S.I.R. எனச் சொல்லப்படும், ஒரு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கிறது. இந்த மாதம் 4ஆம் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 4ஆம் தேதி வரையில் அது நடைபெறுகிறது என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் இதை எதிர்த்து தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நாம் தீர்மானம் போட்டு அந்த அடிப்படையில் உச்ச நீதிமன்றத்திற்கு நாம் சென்றிருக்கிறோம். வழக்குத் தொடுத்து, அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

சட்டப் போராட்டம் ஒரு பக்கம் என்று சொன்னாலும், வாக்காளர் பட்டியல் திருத்தப்படும் பணிகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அது, இன்றைய நிலையில் மிக மிக அவசியமான ஒன்று என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. அதற்காக வருகிற 11-ஆம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டத்தை நாம் நடத்த இருக்கிறோம் என்ற செய்தியைக் கூட நேற்றைக்கு நீங்கள் பார்த்திருப்பீர்கள். எனவே அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, நாம் நம்முடைய உணர்வை வெளிப்படுத்த இருக்கிறோம்.

## கழகத்தை எந்தக் கொம்பனாலும் தொட்டுக்கூட பார்க்க முடியாது!

ஏற்கெனவே வெளியிடப்பட்ட பட்டியல் அடிப்படையில், B.L.O.-க்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று படிவங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டு நாட்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. டிசம்பர் மாதம் நான்காம் தேதிக்குள் இந்தப் படிவங்களை நிரப்பி அதைச் சமர்ப்பித்தாக வேண்டும். அவ்வாறு அளிக்கப்படும் பெயர்கள் மட்டும்தான் வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் என்ற ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும், டிசம்பர் மாதம் 4ஆம் தேதி வரையில் மூன்று முறை அவர்கள் வர இருக்கிறார்கள். நாம் வேலைக்குச் சென்று விட்டால், ஏதாவது பணிகளுக்குச் சென்று விட்டால், வீட்டில் இல்லாமல் இருந்தால், நம்முடைய வாக்குரிமையை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

**SIR குறித்து எந்த நேரத்திலும் கேட்டுத் தெளிவு பெற - அறிவாலயத்தில் உதவி மையம்!**

அதனால், இந்தப் பணி முடிந்த பிறகு ஆன்லைனில் நாம் தொடர்பு கொண்டு சேர்க்கின்ற முயற்சி இருக்கிறது. அது தேர்தல் நேரத்தில் எவ்வளவு பெரிய நெருக்கடி எல்லாம் ஏற்படும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, குறிப்பாக ஏழை எளியவர்கள், உழைப்பாளர்கள், கிராம மக்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட இருக்கிறார்கள். இது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதற்கு ஒரு தொலைபேசி எண்ணை தேர்தல் ஆணையம் தந்திருக்கிறது. ஆனால் அதை மட்டுமே நம்பி நாம் ஏமாந்துவிடக் கூடாது. அதனால்தான் நம்முடைய கட்சியைப் பொறுத்த வரைக்கும், நம்முடைய சென்னை - அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர், நம்முடைய மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அவர்கள் மேற்பார்வையில் உதவி மையம் அமைத்திருக்கிறோம். கழக நிர்வாகிகள் உதவிக்காக ஒரு தொலைபேசி எண்ணையும் அறிவித்திருக்கிறோம். கழக நிர்வாகிகள் அனைவரும் உங்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், அந்தத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும். S.I.R. தொடர்பாக எந்தக் குழப்பம் இருந்தாலும் இதில் நீங்கள் கேட்டுத் தெளிவு பெறலாம்.

**வாக்குத் திருட்டுக்கெதிராக ராகுல்காந்தி நடத்தும் மாபெரும் போராட்டம்!**

அதுமட்டுமல்ல, நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் இளந் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கும் ராகுல் காந்தி அவர்கள் இதற்காகப் பெரிய போராட்டத்தை - இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக, கர்நாடகா, ஹரியானா பகுதிகளில் எந்த அளவிற்கு வாக்குத் திருட்டு நடந்திருக்கிறது என்றெல்லாம் ஆதாரப் பூர்வமாக எடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

அப்படி ஒரு நிலை தமிழ்நாட்டில் நடக்க விடக்கூடாது. வருமுன் காப்பது நமது கடமையாக இருக்க வேண்டும். இந்தப் பெரும் பொறுப்பை கழகத்தின் BLA 2-க்கள் ஒவ்வொருவரும் செய்தாக வேண்டும். தமிழ்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்கும் காவலர்களாகக் கழகத்தின் பூத் ஏஜெண்டுகள் செயல்பட வேண்டும். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வெற்றி பெறப் பணியாற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு,

**குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்!**

இந்த மகிழ்ச்சியான நேரத்தில் மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள். தமிழ்நாட்டிற்குப் பெருமையைச் சேர்த்து, புகழ்மிக்க தமிழ்நாட்டை உருவாக்குங்கள் என்று நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொண்டு, வாழ்க்கையில் அனைத்து நன்மைகளையும் பெற்று, நீங்கள் சிறப்போடு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், "வீட்டிற்கு விளக்குகளாக, நாட்டிற்குத் தொண்டர்களாக" மணமக்கள் வாழ்க... வாழ்க... என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

விளாத்திகுளம் கிராமம், வேம்பார் சாலையில் ஏற்பட்ட

## சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு - நிதியுதவி!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.9-

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், வேலிடுபட்டி கிராமத்தில் வசிக்கும் திருமதி. மாரியம்மாள் க/பெ.வலியன் என்பவர் விளாத்திகுளம் பேரூராட்சியில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி வந்த நிலையில் கடந்த 05.11.2025 அன்று விளாத்திகுளம் வட்டம், விளாத்திகுளம் கிராமம், வேம்பார் சாலையில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டி அருகில் விளாத்திகுளம் வளமீட்புப் பூங்காவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது பின்னால் வந்த லாரி ஒன்று எதிர்பாராத விதமாக மோதியதில் திருமதி.மாரியம்மாள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த திருமதி.மாரியம்மாள் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

**தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி**

**மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்**

**விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா,எம்,எல்,ஏ,, அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

தலைவர் - கே.கே.பழனிச்சாமி, 4/475, சாய் அருள் நிவாஸ், கரட்டடிபாளையம், கோபி.

துணைத் தலைவர் - டி.பாஸ்கரன், 62/1, பிள்ளையார் கோவில் வீதி, புள்ளப்பநாயக்கன்பாளையம், டி.என்.பாளையம்(வழி) கோபி.

அமைப்பாளர் - நா.ரங்கராஜ், பெரிய கள்ளிப்பட்டி, பவானிசாகர்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.கே.செல்வராஜ், செண்பகபுதூர், சத்தி. 2) டி.எம்.சிவராஜ், 116, குமரன் கோவில் வீதி, டி.என்.பாளையம், 3) வே.கணேசன், குழவிக்கரடு, வெள்ளாளபாளையம், கோபி. 4) ஏ.ஈஸ்வரமூர்த்தி, கிழக்கு தோட்டம், உத்தண்டியூர், பவானிசாகர். 5) க.ந.நாச்சிமுத்து, 4/7, கல்லூரி சாலை, கரட்டடிபாளையம் (அ), லக்கம்பட்டி, கோபி. 6) பி.ரங்கசாமி, கிழக்கு வீதி, கே.என்.பாளையம், சத்தி. 7) கே.சக்தி (எ) சண்முகம், 43, வேடர் வீதி, நம்பியூர்.

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாநகரம்**

அமைப்பாளர் - கே.பன்னீர் (எ) முத்துசாமி, 12/70, காவேரியம்மாள் தோப்பு, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639001

துணை அமைப்பாளர்கள் - 1) பி. ராதாகிருஷ்ணன், 73/2, தாந்தோணி குடித் தெரு, திருமாநிலையூர், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639001 2) ஆ.வாசுதேவன், 9/1 - வி.வி.ஜி நகர், 2வது கிராஸ், வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639006 3) பி.மலையப்பன், 47/1சி, பெரியசாமி நகர், பசுபதி லே அவுட், கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639001 4) எ.கதிரேசன், 185சி, தில்லை நகர் 2வது கிராஸ், விவிஜி நகர், வெங்கமேடு, கரூர் மாவட்டம் - 639006 5) எஸ். சம்பத்குமார் 32/2, சேர்மன் ராமானுஜம் தெரு, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639001 6) டி. கோபால், 1/3, வெள்ளகவுண்டன் நகர் 6வது கிராஸ், ராயனூர், தாந்தோணிமலை அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் : 639004

**திருப்பூர் மத்திய மாவட்டம்**

**திருப்பூர் தெற்கு மாநகரம்**

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராக பணியாற்றி வந்த செங்கபள்ளி சுப்பிரமணியன் அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால் அவருக்குப் பதிலாக **சு. சுரேஷ்குமார்** (5/388, ஓம் நமோ நாராயணா நகர், பொல்லிகாளிபாளையம், திருப்பூர் - 641665) அவர்கள் திருப்பூர் தெற்கு மாநகர விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை - 18**
**நாள்: 7-11-2025.**

**அன்னியூர் சிவா, எம்.எல்.ஏ.,**
**செயலாளர்,**
**தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி**

---

## முதல்வரின் நற்பண்புகள்!



என் உயிரினும்மேலான தமிழ் சொந்தங்களே!... தமிழன்னை அகமகிழ்ந்தாள். சிந்தனைக் கூர்மை இவரிடம் சிறப்பு பெற்றிருக்கிறது. கற்பனைக் குதிரை இவரது கடிவாளப்பிடியில் கனிவுபெற்றுள்ளது. அதிகம் பேசாத இவரின் மௌனம் கூட மெத்தப் படித்தவர்களால் பெரிதும் மெச்சப்படுகிறது.


இவரது பேச்சிலே அடுக்கு மொழியில்லை.... கிடுக்குப்பிடி இல்லை... மிடுக்கு நடை இல்லை... துடுக்குத் துணுக்குகள் இல்லை... கடுப்படிக்கும் குட்டிக்கதைகள் இல்லை... தடுப்பணைகள் இல்லவே இல்லை! நேராக விஷயத்தைச் சொல்லும் சீரான பேச்சு. எதிரே அமர்ந்திருப்பவர்கள் ஏதும் அறியாதவர்கள் என எண்ணி மைக்கு முன்னால் மைக்கேல் ஜாக்சன் ஆவதும் இல்லை.

இப்போதெல்லாம் கைதேர்ந்த அரசியல் விமர்சகர்களால் கூட இவரின் உயரத்தை எடை போட முடிவதில்லை.... ஊற்று நீரை போல் களங்கமற்ற செயல்கள்... காற்றைப் போல எல்லா மக்களுக்கும் சுவாசமாகத் திகழ்கிறார். ஆற்று வெள்ளம் போல் எப்போதும் முன்னோக்கியே பாய்கிறார். நான் என்று மார்தட்டுவதுமில்லை... முடியுமா என்று மற்றவர்களிடம் அபிப்பிராயம் கேட்டு காலம் தாழ்த்துவதும் இல்லை.


எல்லாத் தரப்பு மக்களைப் பற்றியும் சிந்தித்து செயலாற்றுகிறார். தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லும் இவர்... இந்திய நாட்டின் ஜனநாயகம் காக்கப்போகும் அடுத்த இரும்பு மனிதர் இவர்தான். இவரது திராவிட மாடல் அஸ்திரம் தான்.... துருப்பிடித்துப் போயிருக்கும் சனாதன சன்மார்க்க அரசியலை புதைகுழிக்குள் தள்ளப் போகிறது..

நமது முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நகைச்சுவை கேட்டால் நன்றாக சிரிப்பார். புதிய கருத்துக்களை கேட்டால் ஆழமாக சிந்திப்பார். யாராவது அவரைப் புகழ்ந்தால் இவர் முகத்தில் எந்த சலனமும் இருக்காது. நமது கலைஞர் கூட நண்பர் ஜெகத்ரட்சகன் பேசுவதை கேட்டால் சிரிப்பார். அவர் புகழ்ந்து பேசுவதை ரசித்து மகிழ்வார்.

இன்றைய முதல்வரை புகழ்வதையே பொழப்பாக்கிக்கிட்ட சிலபேர் உண்டு. இவர்கள் வாய் வலித்து... வார்த்தைகள் கிடைக்காமல் ஓய்ந்து ஓடிப் போகும் வரை இவர் முகத்திலே எந்த ரியாக்ஷனும் இருக்காது. நமது முதல்வரிடம் இருக்கும் நற்பண்புகளில் இதுவும் ஒன்று.



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்



ஈரோடு மாவட்டம் லக்காபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 2 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் அமைக்கும் பணியினை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் கதிர்வேல், கல்வித்துறை அதிகாரிகள், ஆசிரியப் பெருமக்கள் மாணவ மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் - சேலம்

## கோட்டை மைதானத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### சேலம் மாவட்ட தி.மு.க. வேண்டுகோள்!

சேலம், நவ.9 –

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தை கண்டித்து 'மத சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் 11-11-2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, சேலம் கோட்டை மைதானத்தில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்'' சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. தலைமையில், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. மற்றும் கூட்டணிக் கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

எனவே இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' கட்சிகளின் மாவட்ட, மாநகர தலைவர்கள், செயலாளர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர பகுதி, வட்ட, ஒன்றிய, ஊராட்சி கிளை செயலாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்ப வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சேலம் மாவட்ட தி.மு.க. சார்பில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

---

**தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு**

**மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்**

**ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்,எல்,ஏ,, அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் /பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

தலைவர் - எம்.ரங்கசாமி, கலைஞர் நகர், மாதம்பாளையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்.

துணைத் தலைவர் - அ.மூர்த்தி, 28, சிவசண்முகம் வீதி-1, புதுப்பாளையம், அஞ்சல், கோபி, ஈரோடு.

அமைப்பாளர் - கு.சிற்றரசு, 1, ஜெ.கே.நகர், மாதம்பாளையம், புளியம்பட்டி, ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மு.ராதாமுருகேசன், 143, இட்ரகல் புதுக்காடு, ஜி.எஸ். குடியிருப்பு, அந்தியூர், ஈரோடு மாவட்டம். 2) சி.கே. சிவாஜி, 10/24, காந்திநகர் மேல் வீதி, புளியம்பட்டி, பவானிசாகர், ஈரோடு மாவட்டம். 3) எம்.சண்முகம், 4/149, பாரதியார் வீதி, எலந்தக்காடு, சிறுவலூர், கோபி, ஈரோடு மாவட்டம். 4) பி. அண்ணாதுரை, 1/132, பனையம்பள்ளி, பவானிசாகர், ஈரோடு மாவட்டம். 5) சி. மூர்த்தி, 242, பட்டத்தரசி அம்மன் கோவில் வீதி, கோட்டுப்புள்ளாம்பாளையம், கோபி, ஈரோடு மாவட்டம். 6) எஸ். தங்கராசு 1/145, சொக்குமாரிபாளையம், கெட்டிசெவியூர், நம்பியூர், ஈரோடு மாவட்டம்.

**தஞ்சை வடக்கு மாவட்டம்**

**கும்பகோணம் மாநகரம்**

அமைப்பாளர் - வி.எஸ். கருணாகரன் 1156, ஆணைக்காரன் பாளையம், புதுத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். செல்வராஜ் 7இ, கிழக்கு பட்டகால் தெரு, கணபதி நகர், பெருமாண்டி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) மயிலுகார்த்தி (எ) ஆர். கார்த்திக் சி.7, நாகேஸ்வரன் தெற்கு வீதி, குடிசை மாற்று வாரியம் கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) க. கல்யாணசுந்தரம் 19ஏ, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) கா. செந்தில்குமார் 31, ஆணைக்காரன் பாளையத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை - 18**
**நாள்: 7-11-2025.**

**ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
**செயலாளர்,**
**தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு**